**S.T.C No.131/2024**

**Dated: 06.03.2025**

**PW: 1** ஆவுடைத்தாய்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். படித்துபார்த்த பிறகு தான் புகார் மனுவில் கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரிதான். என்ன தொழில் செய்து வருகிறிர்கள் என்றால் குடும்ப தலைவியாக இருக்கிறேன். உங்களது கணவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அவர் ஒரு முன்னாள் இராணுவ வீரர். எந்த வருடம் இராணுவத்திலிருந்து பணி ஓய்வுபெற்றார் என்றால் அக்டோபர் மாதம் 2002.

2) தாவாகடன் தொகை உங்களிடம் இருந்தது என்ற விபரம் எப்படி எதிரிக்கு தெரியும் என்றால் எதிரி என்னிடம் பணம் இருக்கிறதா என கேட்டார், நானும் பணம் இருக்கிறது என்று கூறினேன். தாவாகடன்தொகை உங்களிடம் கையிருப்பாக இருந்தது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்களது கணவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின்பு எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஓய்வு பெற்றபின்பு 6மாத காலம் செக்யூரிட்டியாக இருந்தார், அதன்பிறகு அவருக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்து 2019 ல் காலம் சென்றுவிட்டார்.

3) உங்களுக்கு மொத்த எத்தனை குழந்தைகள் என்றால் ஒரேஒரு மகன் உள்ளார். அவர் என்ன செய்கிறார் என்றால் அவர் வேலைபார்த்துகொண்டே படித்து வருகிறார். அரசு வேலை வாங்கி தருவதற்காக தான் எதிரியிடம் பணம் கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு எந்தெந்த வங்கிகளில் வங்கிகணக்கு உள்ளது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கோவில்பட்டி மெயின் கிளை , தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, கோவில்பட்டி கிளையில் வங்கிகணக்குகள் உள்ளது. இந்த வங்கி கணக்குகளின் வரவு செலவு பட்டியலை பார்வையிட்டால் உங்களது வங்கிகணக்கில் உள்ள இருப்பு தொகை பற்றி தெரியவரும் என்றால் சரிதான்.

4) உங்களது மகன் வருமானத்தை தவிர குடும்பத்திற்கு வேறு வருமானம் இல்லை என்றால் சரிதான். ஆனால் எனது கணவரின் ஓய்வூதியமாக மாதம் ரூ32,877/- வருகிறது. இதை நிருபிக்க கூடிய ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken before me in open court, read over to the
witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
**Kovilpatti.**